இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com
தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்
ISSN: 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)
பகுதி *X*, பதிப்பு *24*, **ஜூலை – டிசம்பர்**; 2026
Formally UGC Approved Journal (64089), © Author

சங்க இலக்கியத்தில் மகளிர் விளையாட்டுகள்

மா. பவதாரணி
முழு நேரம் முனைவர் பட்டம் ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி, பு.முட்லூர், சிதம்பரம்

ஏ. வீரப்பன்
பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி, பு.முட்லூர், சிதம்பரம்

ஆய்வுச் சுருக்கம்

பண்டையத் தமிழரின் அகப்புற வாழ்வியல் விழுமியங்களை எடுத்தியம்பும் முதன்மை ஆதாரங்களாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. அகவாழ்விலும் புறவாழ்விலும் இன்றியமையா இடத்தைப் பெற்றிருந்த மகளிர், தங்களின் அக உணர்வுகளை வெளிப்படுத்தவும், கூட்டுறவுப் பண்பை வளர்க்கவும், தங்களின் மனச்சோர்விலிருந்து விடுபடவும் இன்பநுகர்வின் பொருட்டும் பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டுள்ளனர். சங்க காலம் தொட்டு இன்றுவரையிலும் தமிழ்ச் சமூகத்தில் புழங்கிவரும் இதுபோன்ற மகளிர் விளையாட்டுகள் குறித்த செய்திகள் இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. மகளிர் விளையாட்டுகள் என்பவை வெறும் பொழுதுபோக்குச் செயல்பாடுகள் மட்டுமல்லாமல், அவர்களின் கற்பனை வளம், இயற்கை மீதான அன்பு, சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட சுதந்திர உணர்வு ஆகியவற்றை உணர்த்துவனவாக உள்ளன. இத்தகைய பண்புகளை மகளிர்

விளையாட்டுகள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதை ஆராய முயல்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

முன்னுரை

மனிதனின் அக உணர்ச்சிகள் புறச்செயல்களாக வெளிப்படும்போது அவை விளையாட்டுகளாக உருவெடுக்கின்றன. கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல், அதாவது சாதி, மதம், ஏழை, பணக்காரன், நகர்ப்புறம், கிராமப்புறம் என்ற எந்தப் பாகுபாடும் நுழைய முடியாத இயல்பான ஒழுங்குமுறையைக் கொண்டு விளங்கும் பழந்தமிழரின் விளையாட்டுகள் தமிழ்ப் பண்பாட்டின் தொன்மைச் சின்னங்களாகும். சங்க காலத்தில் இவ்விளையாட்டுகளில் மகளிர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர் என்பதை அறியமுடிகிறது. அந்த வகையில் மகளிர் தங்களின் உடலையும் உள்ளத்தையும் செம்மைப்படுத்திக் கொள்ளப் பல்வேறு ஆடல், பாடல்களைக் கொண்ட விளையாட்டு முறைகளைக் கையாண்டுள்ளனர். எனவேதான், இவ்விளையாட்டுகளை எழுதும் சங்கப் புலவர்கள் வெறும் கற்பனை நயங்களை மட்டும் பாடாமல், அக்கால மக்களின் எதார்த்தமான வாழ்விலையும் பதிவு செய்துள்ளனர். அவற்றுள் மகளிர் விளையாட்டுகள் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. கிராமப்புறங்களில் தோன்றிய பல விளையாட்டுகள் நாளடைவில் நகர்ப்புற மக்களையும் ஈர்த்து, இன்று அவை தொன்மைச் சமுகத்தின் பண்பாட்டு அடையாளங்களாக விளங்குகின்றன.

தமிழரின் கணிதத் திறனை மேம்படுத்தும் விதமாக அமைந்துள்ள பல்லாங்குழி, இயற்கையோடு காதல் உணர்வுகள் ஒன்றிணைந்து காணப்படும் ஊசல் விளையாட்டு, நினைவுக் கூர்மையைத் தரும் கண்புதைந்து ஒளிந்தாடல், சூழலியல் அன்பை வெளிப்படுத்தும் வண்டலிழைத்தல், படைப்பாற்றலை வளர்க்கும் சிறுசோறு ஆக்குதல், தோழியருடன் கூடி வெள்ளத்தை எதிர்த்து நீந்தி விளையாடிய புனலாடல் அவர்களின் உடல்திறனைப் பறைசாற்றுகின்றன. மேலும், பெண் தெய்வ வழிபாட்டோடும், முளைப்பாரி போன்ற சடங்குகளோடும் பிணைக்கப்பட்ட கும்மிப் பாடல்கள் பெண்களின் பக்தி மற்றும் ஆடல் திறனை வளர்த்தன. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சங்க கால மகளிர், செடிகொடிகளைத் தங்களின் சொந்த உறவாகக் கருதி வளர்த்த

பாங்கும், மலர் கொய்து மாலை தொடுத்த அழகியல் உணர்வும் வியக்கத்தக்கவைகளாக அமைகின்றன. மக்களின் கூட்டு உழைப்பிற்கு இலக்கணமாகத் திகழும் சுண்ணம் இடித்தல் முதலான விளையாட்டுகள் பெண்களின் பன்முக ஆளுமையை உணர்த்துகின்றன.

தொல்காப்பியமும் விளையாட்டும்

தமிழில் கிடைத்துள்ள மிகத் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் விளையாட்டு பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. தொல்காப்பியர் உவகை எனும் மெய்ப்பாடு தோன்றும் நான்கு களன்களில் விளையாட்டும் ஒன்று எனக் குறிப்பிட்டுள்ளார் இதனை,

"செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே" (1)

என்ற அடிகளில் மூலம் முன்வைத்துச் செல்கின்றார். மேலும், பழங்கால மக்கள் விளையாடும் விளையாட்டு முறைகளை வைத்து தொல்காப்பியர் அவற்றை வகைப்படுத்தியுள்ளார். அவை, கெடவரல் என்றும், பண்ணை என்று குறிக்கப்படுவதை,

"கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு" (2)

என்று கூறுகிறார். இப்பாடலில் கெடவரல் என்பது நிலத்தில் விளையாடும் விளையாட்டையும், பண்ணை என்பது நீரில் விளையாடும் விளையாட்டையும் குறிக்கின்றது.

பல்லாங்குழி

பல்லாங்குழி என்பது பதினான்கு குழி, பரல்+ஆடும்+குழி = பரலாடும் குழி, பண்ணாங்குழி, பள்ளாங்குழி என்றும் பாண்டி விளையாட்டு என்றும் வழங்கப் படுகிறது.

"முத்து' என்பதற்கு 'பரல்' எனும் சொல்லும் உண்டு. அவ்வாறு பரல் வைத்து ஆடியதால் 'பரல் ஆடும் குழி' என்பது காலப்போக்கில் மாறி வந்து சொல் வழக்கில், பரலாடும் குழி, பரலாங்குழி, பல்லாங்குழி என்று மாறி வந்திருக்கலாம் என்ற குறிப்புகள் உண்டு என்றும் தமிழறிஞர்கள் கூறுகிறார்கள்(FN)" என நவராஜ் செல்லையா குறிப்பிட்டுள்ளார்.

பல்லாங்குழி பெண்கள் விளையாட்டுகளுள் முக்கிய இடத்தைப் பெறுகிறது. பழங்காலத்தில் தரையில் பல குழிகளைத் தோண்டிக் கற்கள் மற்றும் புளியங்கொட்டைகளை இட்டு விளையாடப்பட்டது. இவ்விளையாட்டில் ஓடுகளும்

பயன்படுத்தப்பட்டிருந்தன. இன்றளவிலும் சோழிகளையும், புளியங் கொட்டைகளையும் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது.

பல்லாங்குழி விளையாட்டில் "பாண்டி என்ற சொல் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. பல்லாங்குழி ஆட்ட வகைகளை, முத்துப் பாண்டி, எதிர்ப் பாண்டி, இராசாப் பாண்டி, காசிப் பாண்டி(FN)" என அழைக்கின்றனர். இது இருவர் விளையாடும் ஆட்டமாக அமைந்திருக்கின்றது. ஒவ்வொருவருக்கும் ஏழு குழிகள் எனப் பிரித்து எதிரெதிர் அமர்ந்து ஆடுவர். ஒரு குழியில் ஐந்து காய்கள் என இடுவர். முதலில் ஆடுபவர் ஏதேனும் ஒரு குழியைப் பிரித்து அதன் வலப்புறக் குழியிலிருந்து தொடங்கி ஆடுவர். அது முடிந்ததும் அடுத்த குழியைப் பிரித்து ஆடுவர். காய்களைப் போட்டுக் கொண்டே வரும் போது, காய் தீரும். அதற்கடுத்த குழி வெறுமையாக இருந்தால் அதனைத் துடைத்து அடுத்த குழியின் காய்களை எடுத்துச் சேமிப்பில் வைப்பர். ஒருவர் ஆடி முடிந்ததும் மற்றொருவர் ஆடுவர். பல்லாங்குழி ஆட மரப் பலகைகளால் ஆன பல்லாங்குழிகள், வெண்கலத்தினால் ஆன பல்லாங்குழிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ் விளையாட்டினால் எண்ணுட்பயிற்சி நிறைவாற்றல் முதலான பயன்கள் விளைகின்றன.

ஊசலாட்டம்

மகளிர் தன் தோழிகளுடன் கூட்டமாகச் சேர்ந்து பொழுதுபோக்கிற்காக, மரக்கிளைகளில் கயிற்றைக் கட்டி, அதில் ஒருவர் அமரச் மற்றொருவர் கயிற்றைப் பிடித்து வேகமாக ஆட்டி விடுவதுமாய் விளையாடினர். இது மகளிர் விளையாட்டாக இருந்தபோதிலும் ஆண்களும் பங்கேற்பதாக அமைந்திருந்தது. ஆனால், ஊசல் ஆடுதல் வெறும் பொழுதுபோக்காக மட்டுமல்லாமல் தலைவனின் மகிழ்ச்சி, இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்க்கை மற்றும் சமூக ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது. காதல் உணர்வுகளை வெளிப்படுத்தும் இலக்கிய கருவியாகவும் இது பயன்பட்டுள்ளது. நெய்தல் நிலச் சிறுமியர் சுறாமீன் கொம்பால் செய்த பலகையினைத் தாழையின் விழுதால் திரித்த கயிற்றில் கட்டி ஊசல் அமைத்து, அதில் அமர்ந்தாடி மகிழ்ந்தனர். இதனை,

"தாழை வீழ்கயிற் றூசல் தூங்கி" (அகம் 20 : 6)

எனும் அகநானூற்றுப் பாடல் வரி உணர்த்துகிறது. மேலும்,

"ஊசல் ஊர்ந்து ஆட, ஒரு ஞான்று வந்தானை" (கலி 37 : 14)

எனும் கலித்தொகைப் பாடல் வரி அகமரபில் ஊசல் விளையாட்டு இடம்பெறுவதை உணர்த்துகிறது. இதேபோல பெரிய கயிறுகள் தொங்கவிடப்பட்டு, பனை நார்களால் பின்னப்பட்ட ஊஞ்சலில், அழகிய கண்களையுடைய தோழியர் குழு கூடி ஆடிட ஊக்கப்படுத்தியும், அந்தச் சிறுமகள் ஊஞ்சலில் ஏறாமல் அழுதவாறே நின்றாள் என்ற செய்தியினை,

"பெருங்கயிறு நாலும் இரும்பணம் பிணையல்
பூங்கண் ஆயம் ஊக்க ஊக்காள்"

என்ற பாடலடிகளின் மூலம் அறிய வருகிறது. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் ஊசற்பருவம் என்ற பருவம் இடம்பெற்றிருப்பது சிந்தனைக்குரிய ஒன்றாகும். பெண்பார் பிள்ளைத்தமிழின் பத்துப் பருவங்களில் ஊசல், கழங்கு, அம்மானை என்பன இடம்பெறுவதையும் இங்குச் சுட்டிக்காட்டலாம்.

கண் புதைந்து ஒளிந்தாடல்

ஒரு பெண்ணின் கண்ணை மற்றொரு பெண் கைகளால் மறைத்துக் கொள்ள, பிற பெண்களெல்லாம் ஒளிந்து கொள்வார்கள், ஒளிந்தவர்களைக் கண்பொத்தப்பட்ட பெண் கண்டுபிடிப்பது கண் புதைந்து ஒளிந்தாடல் என்பர். இது மிகவும் பரபரப்பு மிகுந்த விளையாட்டாகும். இவ்விளையாட்டினால் மனமகிழ்ச்சி, அறிவாற்றல் மற்றும் சுறுசுறுப்பு ஆகியன? பருகும் இக்காலத்தில் இவ்விளையாட்டைக் 'கண்ணாமூச்சி', கண்டொழிந்தாடல் எனவும் அழைப்பீர்.. இவ்விளையாட்டை, பெண்கள் விளையாட்டாய் குறிக்கும் அகநானூறு,

"நலம் பெறு கையின் என் கண் புதைந்தோய்" (அகம் 293 : 8)

என குறித்துள்ளது. இதற்கு அக்காலம் சமூகச்சூழல் உதாரணமாக இருந்துள்ளது எனக் கருதலாம். 'இல்லம் கடந்து ஏகும்'சூழல் பெண்களுக்கு இல்லை என்பதால் அவர்கள் தங்கள் வீடுகளுக்கு உள்ளேயே இதனை விளையாடின எனவும் கருத முடிகிறது.

வண்டலிழைத்தல்

வண்டலிழைத்தல் என்பது பழங்கால விளையாட்டுகளுள் ஒன்றாகும். இந்த விளையாட்டில் மணலை நீளமாகக் குவித்து, அதில் ஒரு குச்சியையோ அல்லது விதையையோ மறைத்து வைப்பர். மற்றொருவர் இருகைகளையும் கொண்டு மணலுக்குள் குச்சி அல்லது விதை இருக்கும் இடத்தை மூடிக் கொள்வர்.

அப்போது அவர் கையில் குச்சியோ அல்லது விதையோ அகப்பட்டுவிட்டால் அவர் வெற்றி பெற்றவராகக் கருதப்பெறுவர்.

மணலில் புங்க மரத்தில் விதைகளை வைத்து வண்டலிழைத்துத் தன் தோழியுடன் விளையாடிய தலைவி தன் தாய் அழைக்கவும் வீட்டிற்கு ஓடி வந்துவிடுகிறாள். பல நாட்களுக்குப் பிறகு அவ்விதை முளைத்து மரமாகிறது. பின்னொருநாளில் தலைவன் அம்மரத்தின் அருகில் அவளை அணைக்க முயலுகின்றபோது தலைவி எனது தங்கை முன்பு இவ்வாறு செய்யலாகாது என்று கூறி தலைவனை விளக்குகிறாள்.

தலைவன் புரியாது தலைவியைப் பார்த்து எங்கே உனது தங்கை இருக்கிறாள்? எனக் கேட்கின்றான். அதற்குத் தலைவி தலைவனைப் பார்த்து முன்னர் நடந்தவற்றைக் கூறுகிறாள். அதனைக் கேட்டத் தலைவன் வியந்து போகின்ற செய்தியினை,

விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி,
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய,
'நெய் பெய் தீம் பால் பெய்து இனிது வளர்ப்ப;
நும்மினும் சிறந்தது; நுவ்வை ஆகும்' என்று,
அன்னை கூறினள், புன்னையது நலனே– . . . .(நற்.172, 1–5)

என்ற நற்றிணை பாடலடிகள் குறித்துள்ளன. இடம்பெற்றிருப்பது நோக்கத்தக்கது. இவ்வாறு மரத்தையும் உறவுமுறையுடன் பார்க்கும் தமிழரின் உயரிய பண்பாடு பற்றிய குறிப்பும், மகளிர் விளையாட்டான வண்டலிழைத்தல் பற்றிய குறிப்பும் இதன் வழி அறியப்படுகிறது.. இவ்விளையாட்டை, **"கிச்சுக் கிச்சுத் தாம்பளம்"** என்று கிராமப்புறங்களில் மக்கள் வழங்குவர். இவ்விளையாட்டை,

"கிச்சுக் கிச்சுத் தாம்பளம், கிய்யா கிய்யாத் தாம்பாளம்
ஓட்டை முத்தை வைச்சுக்கிட்டு நல்ல முத்தைத் தா"

என்று கூறி மணலை இழைத்து விளையாடுவர். மேலும், மணலில் உருவங்களைச் செய்து அவற்றிற்குப் பூ முதலியவற்றைச் சூட்டி மகிழ்வதும் வண்டல் விளையாட்டில் உண்டு. நற்றிணை நெய்தல் திணைப்பாடலில் வரும் சிறுமியர் மணலில் வண்டல் பாவையைச் செய்து விளையாடியுள்ளனர் என்பதை,

"நேரிழை மகளிர் வார்மனல் இழைத்த
வண்டற் பாவை வனமுலை முற்றத்து" (நற்.191. 2–3)

எனும் அடிகள் வெளிப்படுத்தியுள்ளது.

குரவை

குரவை என்பது ஒருவகையான கூத்து ஆகும். இக்கூத்தினைப் பெண்கள் ஆடுவது மரபு. இதனை விளையாட்டாகவும் மேற்கொண்டுள்ளனர். குரவை என்பதற்கு "ஒலி, கடல், கூத்து, கைகோர்த்தாடல், பெருஞ்சத்தம், மகளிர் சந்தோச ஒலி(FM)" எனத் தமிழ் அகராதி பொருள் தருகிறது. பந்து, அம்மானை, ஊசல், கழங்கு முதலிய விளையாட்டுகளின் வகைகளில் குரவையும் இடம் பெற்றிருக்கின்றன. குரவை திட்டமிட்ட விளையாட்டாகும். எழுவர், எண்மர், ஒன்பதின்மர் மகளிர் வட்டமாகவும், நின்று கைகோர்த்து ஆடுகின்ற விளையாட்டாக இருந்திருக்கின்றன. இதனை,

"குரவை என்பது எழுவர் மங்கையர்
செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்
தந்நிலைக் கோட்பநின் நாட லாகும்" (சிலப்பதிகாரக் கடலாடு காதை பா, 35)

என பாடல் வரிகள் உணர்த்துகின்றன. குரவைக் கூத்துகளை அறிமுகம் செய்கின்ற நூலாகச் சிலப்பதிகாரம் அமைந்திருக்கின்றது. அதில் ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை என இரு வகையான குரவைகள் இடம்பெற்றுள்ளன. இக்கூத்துவகை,

குறவர்கள் வாழ்கின்ற குறிஞ்சி நிலத்தில் முதலில் தோன்றியிருக்கின்றது. பின்பு பிற நிலங்களுக்கும் இவ்விளையாட்டு பரவியிருக்கின்றது.. அதன் பெயரளவிலேயே குரவையின் பிறப்பிடம் புலனாவதாக உள்ளது. குன்றத்து வாழும் குறவர்களுக்கே உரிய கூத்தாகக் குரவைக் கூத்து அமைந்துள்ளது. தமிழ் இலக்கியங்களில் குறிஞ்சி நிலச்சூழலில் குரவை மகிழ்ச்சியாக நிகழ்ந்ததை அறியமுடிகிறது. குரவைகள் இரண்டு விதமாக நிகழ்ந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஒன்று விளையாட்டுகளின் வகையிலும், மற்றொன்று நின்று, தழுவி, அதற்கென்றமைந்த இடத்தில் ஆடப்பட்டுள்ளது. இவற்றுள் முதலாவதாக அமையும் விளையாட்டு முன்னேற்பாடுகள் எதுவும் இல்லாமல் நிகழ்த்தப்பட்டிருக்க வேண்டும். இதனை,

"மற்பால் நோபானை வாழ்த்தி வயவராம்
அற்பால் அரையிரு மாபைவே – வெண்மாலோடு

இன்றோ படிங்காரஞ் சுற்றப் படியும் போற்றி
மன்றேர்க் குரவை பிணைந்து" (புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம், 162)

என்னும் பாடலின் மூலம் அறியலாம். மேலும்,
"குரவை தழீஇ யாம் ஆடக்
குரவையுள் கொண்டு நிலையாடிக் காண்" (கலி 39 : 28–29)

என்ற பாடலடிகள் வாயிலாக மகளிர் குரவை ஆடும்போது குரவைக் கூத்துக்கேற்ற பாடலை அஆடிப் பாடியுள்ளனர் என்பதை அறியலாகின்றது. குரவையாட்டம் பரவலாக நடைபெற்றது என்பதை அறியும் பொழுது, மகளிர் மிகுந்த மகிழ்ச்சியுடனும் ஆரவாரத்துடனும் ஆடியுள்ளனர் என்பதனையும், இது அவர்களுக்கு விருப்பமான விளையாட்டு என்பதனை உணரலாம்
"குரும்பைக் குவவு மென்றோள் கைகோத்து ஆய்கூங்
இரும் பல் யாணர்க் குரவை அயரும்" (பதிற்றுப்பத்து, பா 73: 7)

எனும் பதிற்றுப்பத்தின் குரவையாட்டம் இச்செய்தியினை குறித்துள்ளது. நற்றிணையில் வரும்,
"வேங்கை முன்றில் குரவையும் கண்டே" (நற்றிணை, பா 276: 10)

என்னும் தோழி கூற்றில், பகற்குறி வந்து தலைவியைக் கூடிவிட்டுச் செல்லும் தலைமகனிடம், தோழி அவனுடைய இல்லறச் சூழலையும் உலகியலையும் சுட்டிக் காட்டி விரைந்து மணந்து கொள்ளுமாறு கூறுவதாக அமைந்துள்ளது.

சிறுசோறு ஆக்குதல்

சிறுமிகள் மணல் வீடு கட்டி சின்னச் செப்புகளை வைத்துச் சோறாக்கி விளையாடுவது இவ்விளையாட்டு ஆகும். தமிழ் அகராதி, சிறுசோறு ஆக்கல் என்பதற்கு "மணற்சோறு, சித்திரான்னம்(FN)" எனப் பொருள் தருகிறது. சிறுவன் அல்லது ஆண்பாவையான 'சிறுமுத்தன்' என்ற பொம்மைத் தெய்வத்தைப் பாடிப் பேணி, சிறுமியர் கூடிச் சிறுசோறு சமைத்து விளையாடியதை,
சிறு முத்தனைப் பேணிச்
சிறுசோறு மடுத்து (கலி 59 : 20)

என கலித்தொகை நூலின் குறிஞ்சிக்கலி பாடலடி மகளிர் சிறுசோறு சமைத்து விளையாடியமையைக் குறிப்பிடுகின்றது.

கும்மி

பெண்கள் வட்டமாகச் சுற்றிவந்து பாடிக் கைகுவித்தடிக்கும் விளையாட்டு **கும்மி** ஆகும். நாட்டுப்புறப் பெண்களுக்கே உரிய விளையாட்டாகவும் பெண்களைத் தெய்வ வழிபாட்டுச் சூழலை ஒன்றிணைக்கும் கருவியாகவும் கும்மி விளையாட்டு விளங்குகிறது. கும்மி நிகழ்த்துதலின் போது பெண்களால் பாடப்படும் பாடல் **கும்மிப் பாட்டு** என வழங்கப்படுகிறது. கும்மியானது **கும்மி கொட்டுதல், கும்மி விளையாட்டு, முளைப்பாரிப் பாட்டு, கும்மி தட்டுதல், கும்மி ஆட்டம்** எனப் பலவாறு கூறப்பட்டாலும் கும்மி தட்டுதல், கும்மிப் பாட்டு என்பதே பெருவழக்காக உள்ளது.

கும்மி, திருவிழாக் காலங்களில் இரவு பகல் இருவேளைகளிலும், பிற நாட்களில் நிலவொளியின் பொழுது போக்குக்காகவும் பெண்களால் விரும்பி ஆடப்படுகிறது. பருவமுற்ற பெண்களுக்குச் சடங்கு நிகழ்த்தும் போதும் கும்மி கொட்டுதல் உண்டு. ஊர்தெய்வ வழிபாட்டில், பொங்கலிடும் போதும், படையலிடும் போதும் குலவையிட்டுக் கும்மி ஆட்டத்தைத் தொடங்குவதும் முடிப்பதும் கும்மியின் மரபாக உள்ளது. கும்மியில் கொட்டப்படும் கைத்தாளமே பக்க இசையாகவும் ஆட்டத்தை வழிநடத்தும் கூறாகவும் அமைந்துள்ளது. கைதட்டுதலின் தாள எண்ணிக்கையில் ஒருதட்டுக் கும்மி, இரண்டுதட்டுக் கும்மி, மூன்றுதட்டுக் கும்மி என்று கும்மி ஆட்டங்கள் தரப்படுத்தப் படுகின்றன.

கும்மி விளையாட்டின் போது கும்மி கொட்டும் பெண்கள் பார்வையாளர்களாக மாறுவதும் பார்வையாளர்கள் கும்மி கொட்டுபவர்களாக மாறுவதும் இயல்பான ஒன்றாகும்.

கும்மியிலும் குரவையிலும் மக்கள் கதைப் பாடல்களினைப் பாடி அவற்றிற்குத் தக்கவாறு ஆடி மகிழ்வதையும் பார்க்கலாம். பெரும்பாலும் பெண்களே இரு கைகளையும் கொட்டியவாறு ஆடிப்பாடுவதைக் "கும்மிப்பாட்டு" என்று கூறுகின்றனர். பெண்கள் ஒரு பாடலுக்குக் கும்மி அடிப்பது மட்டுமல்லாமல், கதைத் தொடர்பான பாடலுக்கும் அபிநயங்கள் செய்து கும்மி அடித்திருக்கின்ற நாடகப் பண்பு புலனாகின்றது. தமிழ் இலக்கிய மரபில் பல்வேறு பாடல்களில் கும்மி இணைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். முருக வழிபாட்டோடு இணைந்த 'வள்ளி' வழிபாட்டில் கும்மி இடம்பெற்றுள்ளது. குறிப்பாக முருகன் வள்ளியை

அழைக்கும் சூழலை கும்மிப்பாடலொன்று குறிப்பதை அறியமுடிகின்றது. இதனை,

"வள்ளிப் பெண்ணே விலங்கு வாராயோ – எந்தன்
மையலைச் சற்றே நீ தீராயோ
வள்ளி யுன்னசை மாறதே – உன்னைக்
கண்டாலு மென்கலி தீராததே"

என்ற பாடலடிகளின் மூலம் அறியலாம். இப்பாடலில் துன்பச்சுவை நிறைந்திருப்பதையும் பார்க்கலாம். இதனால் கும்மி என்பது கொண்டாட்ட பாடலாக மட்டுமல்லாது அருகை மெய்ப்பாடு தோன்றும் இரங்கற்பாடலிலும் இடம்பெற்றுள்ளதாக உணரலாம். அரிச்சந்திரன் கும்மியில், சந்திரமதி மகன் (லோசிதாசன்) இறந்து விட்ட செய்தியில் மன உடைந்து பாடுவதாகப் பாடல் அமைந்திருக்கின்றது. அதனை,

"எனது மதியா ளுரைத்திடவே
அந்த இரக்கமில்லா வேதியனும்
இன்று சிறுறுவ விறந்ததி னானலன்ன
எந்தன் பணஏமல்ல நஷ்டமடி"

என்பதால் அறியலாம். கும்மி, இன்பம், அவலம் ஆகிய சுவைகளைப் பெருக்கியும் நகைச்சுவையையும் இவற்றின் அடுத்தநிலையாக, கதை, வரலாறு, வாழ்த்து என்ற பண்புகளையும் கொண்டிருக்கின்றன. 'சிந்துகவி' என்னும் கண்ணிப் பாடல்களில் கும்மிப்பாடல்கள் அதிகம் இடம்பெற்றிருக்கின்றன. சில இடங்களில் அந்தாதி அமைப்பில் கண்ணிகள் தொடர்வது சுவையாகக் காணப்பட்டிருக்கின்றன. பஞ்சபாண்டவர் வெகுந்தக் கும்மியிலும் இத்தகைய அமைப்புகள் காணப்படுகின்றன. அவை நாடகம் போன்றும் உரையாடல் ஒத்த அமைப்பைக் கொண்டும் பாடப்பெற்றுள்ளன. இவை கும்மிப்பாடல்கள் தொடர்புகளாக அமையாமல் சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு அமைந்துள்ளன.

அம்மன் கோயிலில் திருவிழாக்களால் "முளைப்பாரி" என்ற ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. மக்கள் பதினெட்டு வகையான தானியங்களை முளையிடச் செய்வர். அது பத்து நாட்கள் வளர்ந்து முடிந்ததும் அதனைக்கோயிலுக்கு எடுத்துவருவர். புனிதமாக வைக்கப்பட்ட முளைப்பாரியை வைத்து முதல் ஒன்பது நாட்கள் அதைச் சுற்றிப் பெண்கள் கும்மியடித்துப்

பாடுவார்கள். அவர்களுடைய பாடல் இனிமையாகவும் பொருள் சிறப்பு மிக்கவையாகவும் இருக்கும் என்பதை,

"ஒண்ணாங் கிழமை யன்னிக்கு ஓரிலையாம் முளைப்பாரி
இரண்டாங் கிழமை யன்னிக்கு இரண்டிலையாம் முளைப்பாரி
மூன்றாம் கிழமை யன்னிக்கு மூன்றிலையாம் முளைப்பாரி
நாலாங் கிழமை யன்னிக்கு நான்கிலையாம் முளைப்பாரி"

என்று ஒன்பது நாட்களுக்கும் பாடுவர். இறுதியாகப் **"பத்தாங்கிழமை யன்னிக்கு பத்தே யடைந்திடுமே"** என்று பாடி முடிப்பர். பாடல் மெட்டு 'தானானே தானானே' என்ற அமைப்பில் இருக்கும். பத்தாவது நாள்விழா நடந்தேறும்போது அனைவரும் முளைப்பாரியை எடுத்து ஆற்றில் அல்லது குளத்தில் விட்டு விடுவர். கும்மியடிக்கும் போது பாட்டின் முதலாவது அடி தலைவி பாடுவாள், மற்றவர்கள் அதனைத் தொடர்ந்து பாடுவார்கள். இப்பாடல் உழவுச் சமூகத்தின் மறுஉற்பத்திக்கான சூழலைப் பின்வரும் தலைமுறைக்கு அறிவிப்பதாகவும் அமைகிறது எனலாம்.

வயது வித்தியாசமின்றி ஆடப்படும் கும்மி விளையாட்டைப் பெண்களும், சிறு தெய்வச் சடங்குகளும், வழிபாடுகளுமே பாதுகாத்து வருகின்றன. மகளிர் விளையாட்டுகளில் இடம்பெறும் கும்மிகள் மன மகிழ்ச்சியையும், பொழுது போக்கையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

செடி கொடி வளர்த்தல்

செடிகளையும் கொடிகளையும் வளர்ப்பது பெண்களின் பொழுது போக்காக அமைந்தது. பெண்கள் புன்னை, குவளை, நொச்சி முதலிய செடிகளை வளர்த்து அதன் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்தனர். அவர்கள் வளர்க்கும் செடிகள், கொடிகள், வெயில் மழை பிறவற்றால் வாடிப்போகாமல் பாதுகாத்து வளர்த்திருக்கின்றனர். பெண்கள் செடிகளுக்குப் பெயரிட்டு செடி, கொடிகளை உறவாகவும் கருதி வளர்த்தனர். பூந்தோட்டங்களில் செடிகள் வளர்க்கப்பட்டதை,

"தாழியும் மலர்பல அணியா" (அகம் பா 369: 6)

என அகநானூற்றுப் பாடல் வரி விளக்குகின்றது. செடி கொடி வளர்ப்பதால் பெண்களுக்குப் பொறுமை பொறுப்புணர்வும் கூடுகின்றது. மேலும் இதனால் கற்பனையாற்றல் பெருகுவதோடு எண்ணுவதை முடிக்கும் செயலாற்றலும் வளர்கின்றது. பெண்களால் புன்னைமுல்லை, சந்தனம், மௌவல், கற்பூரம்

போன்ற பல செடி கொடிகள் அன்புடன் வளர்க்கப்பட்டிருக்கின்றன என்பதினை,

"கொண்தகைப் பொதியிற் சோலைக் குழவிய முல்லை
மௌவல், செய்யசந் திமயச் சாரற் கருப்பபுரங்கன்று தீம்பூக்
கைதரு மணியிற் றெண்ணீர் மதுக்கலந்துட்டி மாலை, பெய
தோளி மறைந்து நங்கை பிறையென வளர்க்கின்றானே" (சீவகசிந்தாமணி பா 58: 99)

எனச் சீவகசிந்தாமணி குறிப்பிடுவதைக் காணலாம்.

மலர் கொய்து மாலை தொடுத்தல்

பெண்கள் பொதுவாக மலர்களைப் பறித்து இறைவனுக்கு வழிபாடு செய்திருக்கின்றனர். மென்மையான மங்கையரும், மென்மைத்தன்மை கொண்ட மலர்களும் அழகால் ஒன்றுதான். மலர்களுக்கு மணம் போன்று பெண்களுக்குக் கற்பு எனக் கருதுவது தமிழ்ப் பண்பாடாகும்.

மலர்களின் மீது ஆசைக் கொண்டவர்கள் ஆண்களைவிடப் பெண்களே, அவர்கள் மலர்கள் மீது கொண்ட ஈடுபாட்டினைச் சங்ககாலப் புலவர்கள் கூறுகின்றனர். நாட்டியக்கலை அரசி மாதவியின் மகள் மணிமேகலை ஆடல் மகளிர் கூறிய அத்தனை கலைகளையும் கற்றவள் என மணிமேகலை காப்பியம் கூறுகிறது. ஆயக் கலைகளுள் 'மலர் ஆய்ந்து தொடுத்தல்' என்பதும் ஒன்று. இதில் தேர்ந்தவள் மணிமேகலை என்பதை,

வட்டிமகைச் செய்தியும் மலர் ஆய்ந்து தொடுத்தலும்
கோலம் கோடலும் கோவையின் கோப்பும்
கற்றுத் துறைபோகிய பொற்கொடி நங்கை

என்ற பாடல் புலப்படுத்துகிறது. காலையிலும் மற்றும் மாலை நேரங்களில் பூத்திருக்கும் பூக்களைப் பறித்துத் தொடுத்து மகிழ்ந்த செய்தியினை,

"கொடுங்கழி மருங்கின் அடும்பு மலர்கொய்தும்
கைதை தூக்கியும், நெய்தல் குற்றும்" (நற் பா: 349: 2–3)

என நற்றிணைப் பாடல் குறிப்பிடுகின்றது. வளைந்த கழியின் பக்கத்தில் அரும்பு மலரைக் கொய்தும், தாழம்பூவைப் பறிக்க அசைத்தும், நெய்தல் மலரைப் பறித்தும் மகிழ்ந்த தலைவியின் செயல்களைப் பற்றி அறியவருகின்றது. மேலும்,

தாது சேர் நிகர் மலர் கொய்யும் (குறுந், பா 311: 6)

என்னும் குறுந்தொகைப் பாடலடி பெண்கள் மலர் பறித்து விளையாடுவதுடன் மாலையினைத் தொடுத்தும் விளையாடி இருக்கின்றனர் என்ற செய்தியினை பதிவுப்படுத்துகின்றது. இவற்றோடு,

"அதலைக் குன்றத்து அகல்வாய்க் குண்டு கனைக்
குவளையொடு பொதிந்த குளவிநாறு நறுநுதல்" (நற் பா 59: 2–3)

என்னும் பாடலின் அடிகள் குவளை மலருடன் சேர்த்துத் கட்டிய மல்லிகை மணம் வீசியது என குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, பெண்கள் மலர்களைப் பறித்து மாலையும் சூடி மகிழ்ந்துள்ளன என்பதினையும் அறியமுடிகின்றது. பெண்கள் 99 வகையான மலர்களை கொய்ந்து வந்த செய்தியை,

……………. **வள் இதழ்**
ஒண் செங்காந்தள் ஆம்பல் அனிச்சம்
தன் கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடுவேரி தேமா மணிச்சிகை
………… ……. ……. ……….
………… ……. ……. ……….
அரக்கு விருந்தன்ன பரு ஏர் அம் புழகுடன்
மால அங்கு உடைய மலிவனம் மறுகி
வான்கண் கழீஇய அகல் அறைக் குவைஇ

என குறிஞ்சிப்பாட்டு வரிகள் உணர்த்துகின்றன.

மகளிர் பூக்களைச் சூடி மகிழ்தல்:–

காட்டுப் பகுதியில் கிடைக்கின்ற மலர்களை எல்லாம் பறித்துத் தொகுத்தும், மாலையாகக் கோர்த்து பெண்கள் தலையில் சூடி மகிழ்ச்சியாக இருந்தன. குறுந்தொகையில் முல்லைநிலத்தின் மலரினைப் பறித்து மாலையாகவும் தலையில் சூடி மகிழ்ந்ததினையும்,

"போதின் பொம்மல் ஓதியும் புனையல்" (குறுந், பா 19: 6)

என்னும் பாடல் வரியின் மூலம் அறியமுடிகின்றது. பூவால் ஆகிய அணிகலன்களை செய்யும் போது ஏற்படும் வருத்தங்கள் அதனை அணியும் போது மறைந்து விடுகின்றன. இதனை,

"நின் பல் இருங் கதுப்பின்
குவளையொடு தொடுத்த நறு வீ முல்லை" (நற் பா 367: 7–8)

என்ற நற்றிணை பாடல் வரி உணர்த்துகிறது. மலர்களைப் பறித்துச் சூடி மகிழும் செயல் பெண்களின் விருப்பமான

நிகழ்வினையும், அவர்கள் செயலின் ஊக்கத்திற்கும் காரணமாக அமைகின்றன. இந்நிகழ்வு திட்டமிட்ட விளையாட்டாகவும் விளையாடப்படுகின்றன என்பதை,

"கானல் செல்வக் கலவாய் அலரி
பார்ப்பன மகளிர் சாரற் புறத்து அனைய" (நற் பா 82: 3–4)

என்ற பாடல் வரிகள் கூறுகின்றது. பெண்கள் தங்களின் நீண்ட கூந்தலில் மலரினைச் சூடி மகிழ்ந்திருக்கின்றனர். மலரினைப் பறித்தும் அதனைச் கட்டியும், தலையில் சூடியிருக்கின்றனர். அதன்மூலமாக அவர்களின் பார்வைத் திறனும், முகத்தின் ஒளியினையும் தருகின்றன.

நீர் விளையாடல்

சங்க கால வரலாற்றில் காவிரி, வைகை முதலான ஆறுகளில் நீர் பெருக்கு ஏற்பட்ட காலங்களில் மக்கள் நீராடி மகிழ்வர். நீர் விளையாட்டுகளைப் புனல் விளையாட்டென்றும், பொழில் விளையாட்டென்றும் வகைப்படுத்தியுள்ளனர். நீரில் மறைந்தவரைத் தானும் மூழ்கித் தேடிப் பிடிப்பதும், ஒருவர்மீது மற்றவர் நீரைத் தெளித்தாடுவதும் நீர் விளையாட்டாகும். சிலப்பதிகாரமும் மதுரைக் காண்டத்தின் ஊர்காண் காதையின்,

"கடைகழி மகளிர் காதலம் செல்வரொடு
உருபுனல் வையை மருந்தோங்கு முன்துறை
வரிபூந் துருத்தி வெண்மணல் அடைகரை
ஓங்குநீர் மாடமொடு நாவாய் இயக்கிப்
பூம்புனை தழீஇய புனலாட் டமர்ந்து" (சிலப்பதிகாரம், காதை 14, வரி: 61–65)

என்று புனல் விளையாட்டுப் பேசப்படுகிறது. பெண்கள் விளையாட்டுகளில் நீர் விளையாட்டு முக்கியத்துவம் பெறுகின்றது.. ஏனெனில் பெண் தான் விரும்பும் காதலனோடு கூடி நீரில் மூழ்கியும், நீந்தியும் போட்டியுடன் முன்னோக்கிச் சென்றும், வேகத்துடன் கூடி மகிழ்ந்தாடலுமாய் பெண்களின் நீர் விளையாட்டு அடையாளப்படுத்தப்படுகிறது. பரிபாடலில் வரும் வையைப்பாடல்கள் இதனை உணர்த்துகின்றன.

தோழியர் பலர் கூடி நீரில் மூழ்கியும், ஒருவரை ஒருவர் வெல்லும் நோக்கிலும் நீரில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் பெண்ணொருத்தியின் கண்கள் சோர்ந்து, மயக்கமுற்று நீரில் அடித்துச் செல்லப்படுகிறாள். இக்காட்சியை,

"காமர் கடும்புனல் கலந்து எம்மோடு ஆடுவாள்
தாமரைக் கண்புதைத்து அஞ்சித் தளர்ந்து" (கலித்தொகை, பா 3. 1–2)

என்ற கலித்தொகைப் புலவர் சுட்டியுள்ளார். மகிழ்ச்சியால் நீந்தி விளையாடுவதும் நீர் விளையாட்டாகும். நீரில் விளையாடும் போது உடல் சோர்ந்தாலும் உள்ளம் சோர்வின்றி இருப்பதனால் இப்பெண்கள் தொடர்ந்து விளையாடியுள்ளனர் என்பதை இதன்வழி உணரமுடிகிறது

சுண்ணம் தயாரித்தல்

சுண்ணம் என்பது ஒரு வகையான நறுமணம் மிகுந்த பொடியாகும். சுண்ணம் தயாரித்தல் வெறும் வீட்டுப் பணியாக மட்டுமல்லாமல், மகளிர் மனமகிழ்ச்சியுடன் கூட்டாகச் செய்யும் ஒரு பொழுதுபோக்குச் செயலாகவும் அமைந்திருந்தது. பெரும்பாணாற்றுப்படை, இளம் பெண்கள் பலராகச் சேர்ந்து சுண்ணத்தை இடித்து நுண்ணிய பொடியாக மாற்றினர் எனக் குறிக்கிறது. இவர்கள் நறுமணம் தருவதற்குச் சுண்ணத்தில் அகில், சந்தனம், மலர்மணம் போன்ற நறுமணப் பொருள்களைச் சேர்த்து மணமிக்க சுண்ணம் தயாரித்தனர். இவ்வாறு இடித்த சுண்ணத்தை பலரும் ஒற்றுமையாகக் கூடி ஆடிப்பாடி ஒருவரின் மேல் ஒருவர் தூவி மகிழ்ந்து விளையாடினர். சில நேரங்களில் ஆண்களின் மீது இச்சுண்ணப் பொடியினைத் தூவி விளையாடியுள்ளனர்.. இதனைத் திட்டமிட்ட விளையாட்டாக விளையாடினர் எனவும் கருதமுடிகிறது. பெண்கள் சுண்ணப் பொடியினை எவ்வாறு தயாரித்தனர் என்பதனை,

"புன்காய்ச் சுண்ணம் படைத்த"

என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. பெண்கள் பலரும் சேர்ந்து சுண்ணப் பொடியினை ஒருவர்மேல் ஒருவர் தூவி விளையாடினர் என்பதனை,

"சுண்ண நீறுஆடி"

என்னும் கலித்தொகைப் பாடல் எடுத்தியம்புகின்றது.

இவ்வாறாக மக்கள் பொழுது போக்கிற்காகவும் மனமகிழ்ச்சிக்காகவும் பல்வேறு விளையாட்டுகளை விளையாடி இருக்கின்றனர். இதில் சுண்ணம் தயாரித்தல் என்பது மிகவும் சிறப்பிற்குரிய விளையாட்டாகக் கருதப்படுகிறது.

முடிவுரை

சங்க கால மகளிரின் வாழ்வியலில், விளையாட்டு என்பது வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்லாமல் அது அவர்களின் உடல்நலத்தையும் மனநலத்தையும் பேணிக் காக்கும் ஒரு வாழ்வியல் முறையாகவே இருந்திருக்கிறது.

கணித அறிவை வளர்க்கும் பல்லாங்குழி, நினைவாற்றலைத் தூண்டும் கண்புதைந்து ஒளிந்தாடல், உடலுக்குப் பயிற்சி தரும் நீர் விளையாட்டு (புனலாடல்), மனத்திற்கு மகிழ்ச்சி தரும் ஊசலாட்டம், கூட்டுறவை வளர்க்கும் கும்மி, குரவை மற்றும் சுண்ணம் இடித்தல், இயற்கையின் மீது அன்பு செலுத்த வைக்கும் செடிகொடி வளர்த்தல், வண்டலிழைத்தல், பூப்பறித்தல் எனப் பெண்கள் விளையாடிய ஒவ்வொரு விளையாட்டிற்கும் ஒரு தனிச் சிறப்பு இருந்தமை புலப்படுகின்றது.

தொல்காப்பியம் தொட்டுச் சங்க இலக்கியங்கள் வரை சான்றுகளுடன் சொல்லப்பட்டுள்ள இவ்விளையாட்டுகள், பண்டையத் தமிழ்ப் பெண்களின் சுதந்திரத்தையும், படைப்பாற்றலையும், இயற்கையோடு இயைந்த வாழ்க்கையையும் காட்டுவனவாக அமைகின்றன. சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ள மகளிர் விளையாட்டுகள், தமிழ்ப் பெண்களின் ஆளுமையையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் காலக்கண்ணாடியாக விளங்குகின்றன.

சான்றெண் விளக்கம்

1. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம், பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், நூற்.எண்: 255
2. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், நூற். எண்: 319.
3. எஸ் நவராஜ் செல்லையா, விளையாட்டுக்களுக்கு பெயர் வந்தது எப்படி? ப:48
4. அகநானூறு பாடல் 20:6
5. கலித்தொகை பாடல் 37:14
6. நற்றிணை பாடல் 90: 6–7
7. அகநானூறு பாடல் 293:8
8. நற்றினை பாடல் 172:1–5
9. மேலது 191:2–3
10. சிலப்பதிகாரம் கடலாடு காதை பா: 35

11. புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம் 162
12. கலித்தொகை பாடல் 89:28–29
13. பதிற்றுப்பத்து பாடல் 73:7
14. நற்றிணை பாடல் 276:10
15. கலித்தொகை பாடல் 59:20
16. ஸ்ரீமகள் கோலச்சித்திரம், சென்னை ப:1
17. அரிச்சந்திரன் கும்மிப்பாடல் ப:8
18. குமாரசாமி குன்றக்குடி, குமரன்கும்மி,சுவடி
19. அகநானூறு பாடல் 369:6
20. சீவகசிந்தாமணி பாடல் 58:99
21. மணிமேகலை உரைத்த காதை 27:32
22. நற்றிணை பாடல் 349: 2–3
23. குறுந்தொகை பாடல் 311:6
24. நற்றிணை பாடல் 59: 2–3
25. குறிஞ்சிப்பாட்டு பாடல் 61:98
26. குறுந்தொகை பாடல் 19:6
27. நற்றிணை பாடல் 367:7–8
28. மேலது 82:3–4
29. சிலப்பதிகாரம் ஊர்காண் காதை 61:65
30. கலித்தொகை பாடல் 3:1–2
31. பெரும்பாணாற்றுப்படை அடி:221
32. கலித்தொகை பாடல் 97:10

துணைநூற்பட்டியல்

1. தமிழர் நாட்டு விளையாட்டுகள் – இரா. பாலசுப்பிரமணியம், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், 2008
2. தமிழக கிராமிய விளையாட்டுகள் – குமரி ஆதவன், நியூ செஞ்சுரி, 2023
3. பத்துப்பாட்டு மூலமும் உரையும் – ரா. மறைமலை அடிகள், சரண் புக்ஸ், 2024
4. சங்க இலக்கியம் மூலம் முழுவதும் – ச.வே.சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2006